உ) பத்திரப்பதிவு தமிழ்நாடு (திருத்த) சட்ட முன்வடிவு 1982.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

''1982 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்.

பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஏகமனதாக இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—''1982 ஆம் ஆண்டு பத்திரப்பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, 3 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''1982 ஆம் ஆண்டு பத்திரப் பதிவு (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 16/1982) நிறைவேற்றப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(முற்பகல் 1.10)

(ஊ) நீதிமன்றக் கட்டணங்கள்-வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் —

''தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நீதிமன்றக் கட்டணங்கள்—வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) சட்டமுன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 17/1982) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

---

*1982 மார்ச் 18 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.